**கவனிக்க.**- 2008.07.18 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1561 - 2008 අගෝස්තු 01 වැනි සිකුරාදා - 2008.08.01

1561 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 808 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 811 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 812 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 806 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒகத்து 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூலை 25 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

### நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2009

2009, சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2009, திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் கள்ளுத் தவறணையை சில்லறைக்கு கள்ளு விற்கும் பூரண அதிகாரத்தை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 207 ஆம் இலக்க வர்த்தமானியில் உரிய ஆணையாளரினால் விளம்பரப்படுத்தப்பட்ட சில்லறைக்கு கள்ளுவிற்கும் சட்டங்களுக்கமைய 2008, ஓகத்து 28 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரையில் பிரதேச செயலாளரினால் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கள்ளுக் குத்தகை வாங்க முன் வருபவர் சகல பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய கேள்விப்பத்திரத்தை முறையே பூர்த்தி செய்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வைப்புப் பணத்தை இவ்வலுவலகத்திற்கோ, பிரதேச செயலகத்திற்கோ செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை, மேல் குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலின்படி கள்ளு விற்கும் சட்டங்களுக்கமைய பெற்றுக்கொண்ட பெறுமதிச் சான்றிதழுடன் காகித உறையிலிட்டு முத்திரை குத்தி இடப்பக்க மேல் மூலையில் தான் விலை கோரும் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கடைசி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ இப்பிராந்திய செலயகத்தில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்க வழி வகுக்கலாம்.

3. கேள்விப்பத்திரம் நிரப்பும் போதுண்டாகும் சகல திருத்தங்களும் கேள்வியாளரினால் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த வேண்டும். இப்படியில்லாத கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியான 2008, ஓகத்து 28 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு சகல கேள்வியாளர்களும் பிரதேச செயலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

5. எதுவித ஆட்சேபனையுமின்றி ஒரு கேள்விப் பத்திரத்தையோ எல்லாப் பத்திரங்களையுமோ நிராகரிக்கும் பொறுப்பு நாரம்மல பிரதேச செயலகத்தை சார்ந்ததாகும்.

6. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் என விளம்பரப்படுத்திய பிறகு அதற்குரித்தானவர் அத்திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் நாரம்மல பிரதேச செயலாளர் கூறும் தொகையை வைப்புப் பணமாக செலுத்தி வியாபார நியதிகளுக்கு கைச்சாத்திட வேண்டும்.

7. 2009 ஆம் வருடத்திற்காக தற்போது கள்ளுத் தவறணை உள்ள இடங்கள் தரப்படும் என உறுதி அளிக்கப்படமாட்டாது. தற்போதைய நிலையங்கள் 2009 ஆம் வருடத்திற்காக பெற்றுக்கொள்ளப்படாவிடின் அதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையம் தகுந்தது என கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நாரம்மல பிரதேச செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

8. 2008.08.28 ஆந் திகதி தகுந்த ஆய விற்பனைக்கு தகுந்த கேள்வி இல்லாத விடத்து 2008.10.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மறு ஆய விற்பனை இதே இடத்தில் நடைபெறும்.

9. மேலதிக விபரங்களை இப்பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எல். எச். ரம்யசிறி,
பிரதேச செயலாளர்,
நாரம்மல.

பிரதேச செயலகம்,
நாரம்மல,
2008.07.15.

**அட்டவணை**

| தொடர் இல. | பகுதி | கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடவேண்டிய நேரம் |
|---|---|---|---|---|---|
| 01. | நாரம்மல | 2008.08.28<br>மு. ப. 10.30 | ரூபா 1,000 | மு. ப. 11.00<br>பி.ப. 5.00 | பி. ப. 2.00<br>பி. ப. 8.00 |

7-196

---

### பதுளை பிரதேச செயலாளரின் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2009

கீழே தரப்பட்டுள்ள பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணையில் 2009, சனவரி 01 ஆந் திகதி முதல் 2009, திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் புளித்த கள்ளினை சில்லறையாக விற்பனை செய்யும் பிரத்தியேக உரிமையினை வழங்குவதற்கு 1982, ஓகத்து 20 ஆந் திகதியும் 207 ஆம் இலக்கமும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புளித்த கள்ளினை விற்பனை

செய்வது பற்றிய விதிகளுக்கும் தற்போதைய நடைமுறையில் உள்ள கலால் விதிகள் அனைத்திற்கும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கும் அமைவாக 2008.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை என்னால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கள்ளுத் தவறணையினை குத்தகைக்கு பெற்றுக் கொள்ள முன்வரும் எவரும் எப்பிரதேச செயலாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள கூடியதான விண்ணப்பப்படிவத்தில் முறையாக தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை இங்கு கீழ் உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர வைப்புப் பணத்தினை பதுளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டுடனும் கள்ளு விற்பனைக்கான நிபந்தனைகளுக்கமைய பெறப்பட்ட பெறுமதி சான்று பத்திரத்துடனும் பொறியிடப்பட்டதும் மேல் இடது பக்க மூளையில் "பதுளை இல. 01 கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்" எனத் தெளிவாக எழுதப்பட்டதுமான கடித உறையிலிட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை பொறுப்பேற்கும் கடைசித் நேரத்திற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் போடுவதன் மூலமோ பதுளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரத்தில் செய்யப்படும் மாற்றங்கள் திருத்தங்கள் எல்லாவற்றிற்கும் எதிரில் கேள்விப்பத்திரக்காரர் தமது ஒப்பத்தையிடுவதன் மூலம் அவற்றை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான தேவைகளை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திர முடிவுத் திகதியான 2008.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு எல்லா கேள்விப்பத்திரதாரர்களும் இவ்வலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

05. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லா கேள்விப் பத்திரத்தையுமோ காரணங்காட்டாது நிராகரிக்கும தத்துவம் பதுளை பிரதேச செயலாளருக்குண்டு.

06. தெரிவு செய்யப்படட கேள்விப்பத்திரதாரர் எவர் என்பதனை அறிவித்தவுடன் அன்றைய தினம் பி. ப. 2.00 மணிக்கு முன்பதாக அக்கேள்விப்பத்திரதாரர் இரண்டு மாத வாடகைக்கு குறையாததாகத் தீர்மானிக்கப்படும் தொகையினை பிணைப்பணமாக பதுளை பிரதேச செயலாளருக்கு செலுத்தி குத்தகை விற்பனைக்காக நிபந்தனைகளுக்கு ஒப்பமிடுதல் வேண்டும்.

07. கேள்விப்பத்திரம் தொடர்பாக வேறு விபரங்கள் தேவையாயின் அவற்றை பதுளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

08. தகைமையான கேள்விப்பத்திரம் எதுவென்பது என்னால் பிரகடனப்படுத்தப்பட வில்லையாயின் 2008.10.06 ஆந் திகதி காலை 10.30 மணி வரை இக்கேள்விப்பத்திரமானது மீண்டும் கோரப்படும்.

ஆர். எம். எஸ். டி. ரத்நாயக,
பிரதேச செயலாளர்,
பதுளை.

பிரதேச செயலகம்,
பதுளை.
2008.07.16.

**பதுளை பிரதேச செயலாளர் பிரிவில் 2009 ஆம் வருடத்துக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணை**
(2009.01.01 முதல் 2009.12.31 வரை)

| தவறணையின் பெயரும் விலாசமும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய உள்ளூ ராட்சிப்பிரதேசம் | தவறணை திறக்கும் நேரமும் | தவறணை மூடும் நேரமும் | கேள்வி பத்திர வைப்புத் தொகை | கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி யும் நேரமும் | கேள்விப்பத்திரம் கோரும் திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| பதுளை இல. 01 கள்ளுத் தவறணை | பதுளை | பதுளை மாநகர சபை யின் இல. 06 கொண்ட கொட்டுவ எனும் பிரதேசம் அரச காணி | மு. ப. 11. 00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | ரூ. 5,000 | 2008.08.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை | தகைமையான கேள்விப்பத்திரம் எதுவும் பிரகடனப்படுத்தப்பட வில்லையாயின் 2008.10.06 ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை மீளவும் கோரப்படும். |

ஆர். எம். எஸ். டி. ரத்னாயக,
பிரதேச செயலாளர்,
பதுளை.

8-161

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் கம்பனிச் சட்டத்தின் 7 ஆம் இலக்க பிரகாரம் கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது:-

கம்பனியின் பெயர் : கே. பீ. ஆர். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. : பீவீ 64702
பதிவு செய்த திகதி : 2008.07.04
கம்பனியின் விலாசம் : இல. 04, 16 ஆம் ஒழுங்கை, கொழும்பு 03.

ஜே. அன்ட் ஏ மனேஜ்மன்ட் சிஸ்டம்ஸ் (தனியார்)
வரையறுக்கப்பட்டது.
கம்பனிச் செயலாளர்,

தொலைபேசி இல. : 011-4614887, 011-4737315.

8-32

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, யூலை 01 ஆந் திகதி கோல்டன் ஐ கொன்சோர்டியம் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : கோல்டன் ஐ கொன்சோர்டியம் (பிறைவேற்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 64661
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 20, டிக்கேல் ரோட், கொழும்பு 08

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

8-33

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, ஏப்பிறல் 10 ஆந் திகதி ஐடிஎம் கோர்பரேட் டிரெயின்ங் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

11. கம்பனியின் பெயர் : ஐடிஎம் கோர்பரேட் டிரெயின்ங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63815
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-34

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் யுனியன் நோர்த் (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக் கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் முன்னைய பெயர் : யுனேரோ (பிறைவேட்) லிமிட்டெட்
கூட்டிணைப்பு இல. : பீவீ 61446
கம்பனியின் தற்போதைய பெயர் : யுனியன் நோர்த் (பிறைவேட்) லிமிட்டெட்
பதியப்பட்ட அலுவலக : தன்கொட்டுவ இன்டஸ்ரியல் பார்க், புஜ்ஜம்பொல ரோட், தன்கொட்டுவ.

கம்பனிச் செயலாளர்,

8-35

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2007, ஒற்றோபர் 24 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) கொச்சிக்கடை (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) கொச்சிக்கடை (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 61801
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

8-36

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் இத்தால் தரப்படுகின்றது. ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டிடஸ்) கிரிஉல்ல (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது 2008, மார்ச்சு 18 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸடடீஸ்) கிரிஉல்ல (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63503
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

8-37

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, சனவரி 18 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடிஸ்) எம்பிலிபிட்டிய (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக் கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) எம்பிலிப்பிட்டிய (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 62755
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-38

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, மார்ச்சு 31 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) குருநாகலை (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்ட தென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) குருநாகலை (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63635
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-39

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2007, ஓகத்து 15 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) பதுளை (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) பதுளை (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 61031
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-40

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, மாச்சு 12 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) நீர்கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்ட தென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) நீர்கொழும்பு (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63414
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

8-41

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008 பெப்புருவரி 18 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டிடீஸ்) களுத்துறை(பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்ட தென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) களுத்துறை (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63087
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

8-42

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் விதிகள் பிரகாரம் 2008, மார்ச் 10 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) கண்டி (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) கண்டி (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63364
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்

8-43

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, மாச்சு 31 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) வவுனியா (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) வவுனியா (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 63636
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-44

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2008, யூன் 2 ஆந் திகதி ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) நிட்டம்புவ (பிறைவேட்) லிமிட்டெட் கூட்டிணைக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

கம்பனியின் பெயர் : ஐடிஎம் கொம்பியுடர் (ஸ்டடீஸ்) நிட்டம்புவ (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவு இல. : பீவீ 64303
பதிவுசெய்யப்பட்ட முகவரி : இல. 25, விசாகா ரோட், கொழும்பு 04

நெக்ஸியா கோர்ப்பரேற் கொன்ஸல்டன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-45

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனங்கள் கட்டளை சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட கீழ் குறிப்பிடப்படும் நிறுவனம் தொடர்பான விடயங்கள் அச்சட்டத்தின் 9 ஆம் சரத்தின் 1 ஆம் உப சரத்தின் விதிகளுக்கமைய இத்தால் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் பெயர் : ஹெறிட்டேஜ் இனிஷியேட்டிவ்
பதிவுஇலக்கம் : ஜீஏ 2127
பதிவுத் திகதி : 2008.07.07
பதிவு முகவரி : இல. 32, உஸ்வத்தை மாவத்தை, எத்துல் கோட்டை, கோட்டை

லியனகே அஜித் பரக்கும் ஜயசிங்க,
செயலாளர்.

8-100

## அற்றோணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 4, வஜிரா ரோட், இல. 137/1 இல் வசிக்கும் பெருஸ் ஹாஜி அன்வர் ஆகிய நான், கொழும்பு 4, வஜிரா ரோட், இல. 137/ 1 இல் வசிக்கும் அக்பர் ஹாஜி அன்வர் என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட சரவணன் நீலகண்டன் கொழும்பு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 31 ஆந் திகதி தை மாதம் 2008 ஆம் ஆண்டு என திகதியிடப்பட்டதுமான 2 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவப் பத்திரத்தினை ரத்துச்செய்துள்ளதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட அக்பர் ஹாஜி அன்வர் என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக் காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

பெருஸ் ஹாஜி அன்வர்.

2008, ஆவணி 1.

8-162

## அற்றோணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 6, ஹம்டன் லேன், இல. 91/12A இல் வசிக்கும் மொஹமது முக்தார் ஹாஜி அன்வர் ஆகிய நான், கொழும்பு 4, வஜிரா ரோட், இல. 137/1 இல் வசிக்கும் அக்பர் ஹாஜி அன்வர் என்பவரின் சார்பாக வழங்கப்பட்ட சரவணன் நீலகண்டன் கொழும்பு பிரசித்த நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 31 ஆந் திகதி தை மாதம் 2008 ஆம் ஆண்டு என திகதியிடப்பட்டதுமான 3 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவப் பத்திரத்தினை ரத்துச்செய்துள்ளதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் அறிவித்தல் வழங்குகிறேன்.

இங்கு குறிப்பிடப்பட்ட அக்பர் ஹாஜி அன்வர் என்பவரினால் என் சார்பாக செய்யப்படும் எக் காரியம் தொடர்பாகவும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

மொஹமது முக்தார் ஹாஜி அன்வர்.

2008, ஆவணி 1.

8-163

## கம்பனி உருவாக்கம் சம்பந்தமான பொது அறிவித்தல்

கம்பனிகள் அதிகாரச் சட்டம் 5 ஆம் பிரிவுக்கு அமைய, ரிவர்சைட் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற கம்பனி 2008, யூன் 23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது என்ற விபரம் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவிற்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ரிவர்சைட் ரிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனிப் பதிவு இலக்கம் : பீவீ 64548
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : இல. 83, ஜோர்ஜ் ஆர். டீ. சில்வா மாவத்தை, கொழும்பு 13

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கார்சன்ஸ் மனேஜ்மன்ற் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

8-180

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் கம்பனி புதிதாக கூட்டிணைக்கப்பட்டதற்கான அறிவித்தல்**

*கம்பனிப் பெயர் : காவிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவு அலுவலகம் : இல. 23/12, சென் அந்தனி வீதி, வத்தளை*
*பதிவு இல. : பீவீ 64471*
*கூட்டிணைப்புத் திகதி : 2008.06.16*

*கம்பனிச் செயலாளர்.*

*8-222*

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**சிலாப பிரதேச செயலக பிரிவில் அந்நிய மதுபானத் தவறணை குத்தகை விற்பனை - 2009**

2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபானத் தவறணைகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாகவே கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்பட வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட கடித உறையில் இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் பின்வருமாறு -

"........................................ இலக்கம் கொண்ட ........................................ அந்நிய மதுபானத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு 2008.08.14 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அதனை இடுதல் வேண்டும். அல்லது மேற்குறித்த திகதி, நேரத்திற்கு முன் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.03.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள அந்நிய மதுபான குத்தகை நிபந்தனைகளுக்கமைவாக அமைதல் வேண்டும்.

5. 2008.08.14 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே சகல கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திரதாரர்களும் சிலாப பிரதேச செயலகத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியின் நிபந்தனைகளுக்கமைய இதுவரை குத்தகை விற்பனை செய்யப்படாமல் ஏதாவது தவறனை இருப்பின் அவை 2008.09.26 ஆம் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீள் விற்பனைக்கு விடப்படும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் சிலாபம் பிரதேசச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 032-2223205)

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் திகதியும் | மீள்விற்பனை செய்யும் நேரமும் திகதியும் | தவறணை திறக்கும் நேரம் | தவறணை மூடும் நேரம் | வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| சிலாபம் | இல. 7, பிடிபன தெரு, சிலாபம் | 2008.08.14 மு. ப. 10.30 | 2008.09.26 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 500 |
| சிலாபம் | இல. 6, பசார் தெரு, சிலாபம் | 2008.08.14 மு. ப. 10.30 | 2008.09.26 மு. ப. 10.30 | மு. ப. 11.00 பி. ப. 5.00 | பி. ப. 2.00 பி. ப. 8.00 | 1,500 |

யூ. எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2008.07.14

*8 - 123*

# ஏல விற்பனைகள்

## மக்கள் வங்கி (தியத்தலாவைக் கிளை)

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம் கொண்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**ஆதனம் ஏல விற்பனை**

இரத்தினபுரிய மாவட்டம், கொலொன்னா கோறளை கொலொன்னாகம் பத்து கொலொன்னா பிரதேச சபை எல்லைக்குள் இட்டிக்கந்தயில் அமைந்துள்ள நிதன்கெபுஹேன என அழைக்கப்படும் காணி கட்டிடம் மற்றும் அதன் சுற்றுப்புறம் என்பன மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2008.08.29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்படும்

**ஆதனத்தைப் பற்றிய விபரம்**.- உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஏ. ரத்தினம் அவர்களால் 1997.05.17 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 6016 ஐக் கொண்ட வரைபடத்தில் லொட் இல. 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 1 ஏக்கர், 15 பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 15பே.) பரப்பளவு கொண்ட காணியும் கட்டிடங்களும் உட்பட அனைத்துமாகும்.

2004.03.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2006.04.07 ஆந் திகதிய "தினமின", 2006.04. 10 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்" ஆகிய செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ள ஏலவிற்பனைப் பிரேரணை அறிவித்தலைப் பார்க்கவும்.

**ஆதனத்திற்குள் பிரவேசித்தல்**.- இறக்குவானை டெனியாய வீதியில் சூரியகந்தயிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் செல்லும் போது காணப்படும் சிங்கராஜ மகா வித்தியாலயத்தைத் தாண்டி சுமார் 200, 250 மீட்டர் செல்லும் போது பாதையின் ஓரமாக ஆதனம் அமைந் துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.-ஏலவிற்பனை முடிவடைந்ததும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்க்காணும் முறையில் பணம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவுத் தொகையில் 10%;
(2) உள்ளூராட்சி அதிகார சபைக்கு 1%;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக 2 ½%;
(4) இலிகிதர் மற்றும் அறிவிப்பாளரின் கொடுப்பனவாக ரூபா 500;
(5) விற்பனைச் செலவுகளும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அந்தப் பணமும் விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணமும்;
(6) கொள்வனவு விலையில் மிகுதி 90% ஆன பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பதுளை, இலக்கம் 24, ஆர். எச். குணவர்தன மாவத்தை, மக்கள் வங்கியின் ஊவா வலய அலுவலக உதவிப் பொது முகாமையாளர் (ஊவா வலய) அவர்களிடம் செலுத்துதல் வேண்டும். தொலைபேசி இல. : 055-2222165/ 055-2223068, பெக்ஸ் இல. : 055-2222361

உரிமை உறுதிப்பத்திரம் மற்றும் ஏனைய தொடர்புடைய விபரங்கள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தியுள்ள கொள்வனவு விலையில் 10% ஆன பணம் திருப்பி செலுத்தாமலிருக்கவும் மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு.

டப்ளிவ். ஜயதிலக,
(சமாதான நீதவான்),
பகிரங்க ஏலதாரர், மதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

48/1, கலுகல்பிட்டிய,
பதுளை,
தொலைபேசி இல.: 055-2230846

8 - 26

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ – தலங்கம கிளை

(முன்னர் ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் எனப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதியான சொத்தின் ஏலவிற்பனை**

**அனைத்து மற்றும் தனி, அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் பின்வருவன உள்ளடங்கலாக.**

| விபரம் | தயாரிப்பு/மொடல் | தொடர் இல. |
|---|---|---|
| 1. வெட்டும் மெஷின்கள் | ஹெய்டல்பேர்க் | 65512-2 |
| 2. அச்சடிக்கும் ஓப்செட் மெஷின் | ஹெய்டல்பேர்க்/ கோர் | 563/373 – 753 |

**இவற்றின் சகல உதிரிப்பாகங்களுடன் (அனைத்தும் இதன் பின்னர் கூட்டாக கடமைப்பட்டவரின் அசையும் இயந்திராதிகள் மற்றும உபகரணங்கள் என அழைக்கப்படும்) மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட, அங்கொடை கொட்டிகாவத்த, அவிசாவளை வீதி, இல. 338/1 இல் காணப்படும் மற்றும் கடமைப்பட்டவர் தற்போதுள்ள சகல வளவுகளிலும் அல்லது எந்தவொரு நேரமும் மற்றும் நேரத்திற்கு நேரம் மேலே குறிப்பிட்ட மாவட்டத்தில் குறித்த அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணம் மற்றும் அதனுடன் சேர்ந்தவை நேரத்திற்கு நேரம் மற்றும் சகல நேரங்களிலும் தொடர்ச்சியாகவுள்ள இவற்றைக் கொண்டு வரமுடியும் அல்லது வைக்க முடியும் மற்றும் அனைத்தும் அல்லது ஏதாவதொரு இடம் அல்லது இடங்களில் கடமைப்பட்டவர் எந்நேரமும் மற்றும் நேரத்திற்கு நேரம் இதன்பின் அகற்றவும் மற்றும் கடமைப்பட்டவரின் அசையும் இயந்திராதிகள் மற்றும் உபகரணத்தைக் கொண்டு வரமுடியும்.**

*(கடமைப்பட்டவரும் சொத்தை ஹற்றன் வங்கி பீஎல்சீ க்கு சொத்தை ஈடுவைத்தவருமான கப்பலகே ஜானக்க ஆனந்த, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹொட்டி அவர்களால் 2004.10.26 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2516 இல் கொடுப்பனவு தவறியுள்ளார்.)*

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ யால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், மேலே குறிப்பிடப்பட்ட சொத்தை அதே இடத்தில்

2008.08.20 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**-தயவு செய்து, 2007.10.05 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும் 2007.11.06 ஆந் திகதிய ''ஜலன்ட்'', ''திவயின'', மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலத்தினிறுதியில் சித்திகரமான கொள்வனவாளர், பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%);
(2) உள்ளூராட்சி சபைகளுக்கான ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;
(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) மொத்த விளம்பரச் செலவு.

விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி இல் வைப்பிலிடப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் எஞ்சிய தொகை செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல் செய்து சொத்தை மீள விற்பனை செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

மேலதிக விபரங்கள், காணி உறுதி, ஏனைய தொடர்புடைய ஆவணங்கள் என்பவற்றை உரித்து உறுதிகளையும் வேதேனும் குறிப்புக்களையும் "கொழும்பு 10, ரி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, "எச். என். பி. கோபுரங்கள்", ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சி, சிரேஷ்ட முகாமையாளர்" இடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2661815, 2668816.

ரஞ்ஜித எஸ். மஹநாம
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவு பெற்ற ஏலதாரர்.

"ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்",
மஹாநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே,
தொலைபேசி இல. : 2863121.

8-170

---

### சம்பத் வங்கி பி எல் சி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

கணக்கு இல. : 0030 1000 0881 - கோக்கோவுட் எக்ஸ்போர்ட்ஸ்

2008.07.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2008.05.02 ஆந் திகதிய "திவயின", "த ஐலன்ட்" மற்றும் "தினக்குரல்" எனும் பெயரிலான தினசரி செய்திப் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பபட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 2005.02.22 ஆந் திகதியிடப்பட்ட, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய, மூன்று இலட்சத்து எழுபதாயிரத்து அறுநூற்று எண்பத்தைந்து ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 3,70,685.37) ஐ மேலும் 2004, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை மூன்று இலட்சத்து நாநூறு ரூபா (ரூ. 3,00,400) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பத்தொன்பது சதவீத (19%) வட்டியுடனும், உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் 2008.08.25 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு சொத்து அமைந்த இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், மாறாவில பதிவுப் பிரிவில், பிட்டிகள் கோரளை கம்மல் பத்து இல் வென்னப்புவ எனுமிடத்தில் அமைந்த கோன்கஹவத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜி. செல்டன் சமரதுங்க அவர்களால் தயாரிக்கப்படடு 1977, நவெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட நில அளவை வபடம் இல. 1222 இல் குறிப்பிடப்பட்டு துண்டுகள் 02 மற்றும் 03 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த சகலதுடன். மேற்கூறப்பட்ட காணியின் எல்லைகளாவன வடக்கில் : கிராமசபை றோட்: கிழக்கில் : மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 1222 இல் துண்டுகள் 4 ற்றும் 05 ; தெற்கில் : ரோட் மற்றும் எம். எச். சயிமன் அப்புஹாமியின் காணி மற்றும் மேற்கில்: துண்டு 1 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 1222 இற்கமைய இந்தக் காணி இரண்டு றூட் (0ஏ. 2றூட். 0பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி தொகுதி/பக்கம் ஜி 81/34 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-186/1

---

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல.: 766/98

#### சொத்து, நிலமனை ஏல விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் 2000.04.22 ஆந் திகதி 1130 ஆம் இலக்க வர்த்தமானிகளிலும் 2000.04.20 ஆந் திகதி 'டெய்லி நியூஸ்',

'தினமின', 'தினகரன்' பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ்அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 39, மாத்தறை, கோட்டை வில்பறட் குணசேகர மாவத்தை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. எம். எச். பத்மானந்த சிறிவர்தன 2008.08.23 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளை வெலிகம பிரதேச சபை எல்லைகளுள் தெனிபிட்டியவில் அமைந்த பெரகம்மகேஹேனவத்த என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : மல்லவத்தயும் ; கிழக்கில் : வெல்லாலகேவத்தயும் ; தெற்கில் : மஹஹேனவத்தயும் சேரங்துகே கொரட்டுவயும் ; மேற்கில் : ஆரச்சிகே ஹேனயும் எல்லைகளாகக் கொண்டு மூன்று றூட்டுகள் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இது மாத்தறை காணிப்பதிவகத்தில் டி 758/ 256 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி அண்மைய அளவை வரைபடத்தில் பெரும்பாலும் பின்வருமாறு விபரித்துள்ளது :

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோறளை வெலிகம பிரதேச சபை எல்லைகளுள் தெனிபிட்டியவில் அமைந்த பேரகமகேவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஏ. எஸ். பிரேமரத்ன தயாரித்த 1991, ஏப்பிறல் 24 திகதியிட்ட வரைபடம் இல் 3756 இல் துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கில் : றோட்டும் மல்லவத்தயும் ; கிழக்கில் : வெல்லாலகேவத்தயும் ; தெற்கில் : மஹஹேனவத்தயும் ஆரச்சிகே வத்தயும் ; மேற்கில் : ஆரச்சிகே ஹேனயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 3756 இன்படி மூன்று றூட்டுகள் (0ஏ. 3றூ. 0பே.) விஸ்தீரணமுடையது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி

ரீ. பீ. கே. குணசேகர,
பிரதான முகாமையாளர்,

இலங்கை வங்கி,
காலி மேற்தரக் கிளை,
கோட்டை,
காலி.

